Australian Government
Department of Home Affairs

# Status Resolution Support Services Programme
# Repayment Agreement
# ‘தகுநிலை தீர்மானிப்பு ஆதரவு சேவைகள் திட்டம்’
# ‘கடன் திரும்பச் செலுத்தல் ஒப்பந்தம்’

Form
1448 TAM
TAMIL

## ‘தகுநிலை தீர்மானிப்பு ஆதரவு சேவைகள் திட்டம்’

Status Resolution Support Services (‘தகுநிலை தீர்மானிப்பு ஆதரவு சேவைகள் திட்டம்’ (SRSS))என்பது நிதி ஒத்தாசைகளையும் பல வித ஆதரவுதவி சேவைகளையும் வழங்குகிறது. இந்த SRSS திட்டத்தில் நீங்கள் சேரும்போது அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் Department of Human Services (மானிட சேவைகள் திணைக்களம்) (மானிட சேவைகள்)-இன் SRSS கொடுப்பனவுகளைப் பெறும் தகுதி உங்களுக்கு இருக்கக்கூடும். Department of Home Affairs (உள்நாட்டு விவகாரத் திணைக்களம்) (‘திணைக்களம்’) -இன் சார்பாக SRSS கொடுப்பனவுகளை Human Services வழங்கும். மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் ‘திணைக்கள’த்தின் சார்பாக ஒரு SRSS சேவை வழங்குனரும் கொடுப்பனவுகளை வழங்கலாம்.

## ‘கடன் திரும்பச் செலுத்தல் ஒப்பந்தம்’ என்பது என்ன?

‘கடன் திரும்பச் செலுத்தல் ஒப்பந்தம்’ (‘ஒப்பந்தம்’) என்பது உங்களுக்கும் ‘திணைக்களத்திற்கும் இடையேயான ஏற்பாடாகும். மிகைக்கொடுப்பனவுகள், முன் தொகைகள் அல்லது SRSS திட்டத்தின் கீழ் ‘திணைக்கள’த்தினால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உங்களுக்குரியதல்லாத மற்ற தொகைகள் எதையும் திருப்பித் தருமாறு இது வேண்டுகிறது. இந்த ‘ஒப்பந்த’த்தின் கீழ், நீங்கள் பெறுவதற்கு உரிமை இல்லாத கொடுப்பனவு எதையும் SRSS திட்டத்தின் கீழ் நீங்கள் பெற்றால், இந்தத் தொகை முழுவதையும் உங்களுடைய தனிப்பட்ட சூழ்நிலைகளின் பிரகாரம், ‘திணைக்கள’த்திற்குத் தவணை முறையில் திருப்பிச் செலுத்துமாறு நீங்கள் வேண்டப்படக்கூடும். நீதிமன்றத்தினை சட்டப்படி அணுகி அப்படிப்பட்ட தொகைகளைத் திருப்பிச் செலுத்துமாறு கேட்கும் தெரிவும் ‘திணைக்கள’த்திற்கு இருக்கும்.

கொடுப்பனவுகள் உள்ளடங்க, SRSS திட்டத்தின் கீழ் ‘திணைக்கள’மானது உங்களுக்கு ஆதரவுதவி சேவைகளை வழங்க இயலுவதற்கு முன்பாக நீங்கள் கட்டாயமாக இந்த ‘ஒப்பந்த’த்தினை வாசித்து அதில் கையொப்பம் இடவேண்டும். இந்த ‘ஒப்பந்த’த்தினை விளங்கிக்கொள்வதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உங்களுக்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை ஒழுங்கு செய்யக்கூடிய உங்களுடைய SRSS சேவை வழங்குனர் அல்லது ‘திணைக்கள’ அதிகாரி ஒருவருடன் தொடர்புகொள்ளுங்கள்.

இந்த ‘ஒப்பந்த’த்தினைப் பூர்த்தி செய்வதற்கு முன்பாக, படிவம் 1450 *Privacy notice and consent (தகவல் பாதுகாப்பு அறிவிப்பு மற்றும் சம்மதம்)* எனும் படிவத்தினை நீங்கள் வாசித்து விளங்கிக்கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். **www.homeaffairs.gov.au/allforms/** எனும் ‘திணைக்கள’ வலைத்தளத்தில் அல்லது ‘திணைக்கள’ அலுவலகங்களில் இருந்து ‘படிவம் 1450’ கிடைக்கும்.

## தகவல் பாதுகாப்பு குறித்த முக்கியத் தகவல்கள்

உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களானவை Privacy Act 1988 (தகவல் பாதுகாப்பு சட்டம் 1988)-ஐ உள்ளடக்கிய சட்டத்தினால் பாதுகாக்கப்படுகிறது. உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை, உணர்வார்ந்த தகவல்கள் உள்ளடங்க, திரட்டுதல், பாவித்தல் மற்றும் வெளிப்படுத்துதல் (கடல்கடந்த முகமைகள் உள்ளடங்க, மற்ற முகமைகளுக்கும் மூன்றாம் தரப்பினருக்கும்) ஆகியவறைப் பற்றிய முக்கிய தகவலகள் ‘படிவம்1442i Privacy notice (தகவல் பாதுகாப்பு அறிவிப்பு) -இல் உள்ளன.

**www.homeaffairs.gov.au/allforms/** எனும் ‘திணைக்கள’ வலைத்தளத்தில் அல்லது ‘திணைக்கள’ அலுவலகங்களில் இருந்து ‘படிவம்1442i’ கிடைக்கும்.

இப்படிவத்தினை நிரப்புவதற்கு முன்பாக படிவம் 1442i -ஐ நீங்கள் வாசித்து விளங்கிக்கொள்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

## இந்த ‘ஒப்பந்தம்’ எதைக் குறிக்கிறது?

SRSS திட்டத்தின் கீழ் உங்களுக்கு உரியதல்லாத கொடுப்பனவுகளை நீங்கள் பெறும் தருணங்கள் இருக்கலாம். அப்படி என்றால், Human Services -இடம் இருந்து கிடைத்த மிகைக்கொடுப்பனவாக இருந்தாலும், அல்லது SRSS திட்டத்தின் கீழ் கிடைத்த முன்தொகைக் கொடுப்பனவாக இருந்தாலும் அந்தத் தொகைகளை நீங்கள் திருப்பித் தர வேண்டியிருக்கும்.

பாக்கித் தொகைகளைத் ‘திணைக்கள’த்திற்கு நீங்கள் திருப்பிச் செலுத்தவேண்டும் என்ற உங்களுடைய சட்டப்படியான கடப்பாடுகளை இந்த ‘ஒப்பந்தம்’ விளக்கிச் சொல்கிறது. நீதிமன்ற உத்தரவு ஒன்றின் கீழ், அப்படிப்பட்ட தொகைகளைக் கடன் என்ற முறையில் சட்டப்படி மீண்டும் வசூலிக்கும் நிலை ஏற்படக்கூடும். உங்களுக்குக் கிடைக்கும் வழமையான SRSS கொடுப்பனவுகளிலிருந்து பணத்தைக் கழித்துக் கொள்ளவும், ‘திணைக்கள’த்திற்குச் செலுத்தவேண்டிய கடன் என்ற முறையில் நீதிமன்ற உத்தரவு ஒன்றின் மூலம் தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு கேட்கவும் Human Services -இற்கும் ‘திணைக்கள’த்திற்கும் இந்த ‘ஒப்பந்தம்’ அதிகாரமளிக்கிறது.

## இந்த ‘ஒப்பந்த’த்தின் கீழ் மிகைக்கொடுப்பனவு என்பதன் அர்த்தம் என்ன?

தவறுதலாக, கொடுக்கவேண்டியதை விட அதிகப் பணத்தினை Human Services உங்களுக்குக் கொடுக்கும் சூழ்நிலைகள் இருக்கலாம். இது ‘மிகைக்கொடுப்பனவு’ என்று சொல்லப்படும். மிகைக்கொடுப்பனவுத் தொகை உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்போது இந்தப் பணத்தினை நீங்கள் Human Services -இற்குத் திருப்பச் செலுத்துமாறு வேண்டப்படுவீர்கள். மிகைக்கொடுப்பனவு ஏற்படுவதற்கான பல காரணங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

- தவறாகக் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் அல்லது கணினிப் பிழை;
- சூழ்நிலை மாற்றங்களை நீங்கள் Human Services -இற்குத் தெரிவிக்காமலிருப்பது. உதாரணமாக, வேறொரு வருமானம் உங்களுக்கு இருப்பது, உங்களுடைய வாழ்க்கைத் துணைவரது வருமானத்தை நீங்கள் அறிவிக்காமலிருப்பது அல்லது நட்டஈட்டுத் தொகை ஒன்றை நீங்கள் பெற்றிருப்பது; மற்றும்
- வாடகை ஒப்பந்தம் முடியும்போது செய்யவேண்டிய சரிபார்ப்பு வேலைகள் உள்ளடங்க, உங்களால் அல்லது உங்களுடைய குடும்ப அங்கத்தவரால் வீட்டிற்கு ஏற்படுப்பட்டுள்ள சேதாரம்.

உங்களுடைய தவறின் காரணமாக இல்லாமல், Human Services அல்லது ‘திணைக்கள’த்தின் தவறின் காரணமாக இருந்தாலும் கூட, எக்காரணத்தை முன்னிட்டாவது அதியளவுக் கொடுப்பனவுகளை நீங்கள் பெற்றால், ‘திணைக்கள’த்திற்குக் கொடுக்கவேண்டிய கடன் என்ற முறையில் அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு நீங்கள் வேண்டப்படுவீர்கள்.

## மிகைக்கொடுப்பனவு ஒன்று எனக்குக் கொடுக்கப்படிருந்தால் என்ன ஆகும்?

Human Services -இற்கு நீங்கள் கொடுக்கவேண்டிய கடன் இருந்தால், பின்வரும் விபரங்களைக் கொண்ட கடிதம் ஒன்று உங்களுக்கு அனுப்பப்படும்:

- உங்களுக்குக் கடன் ஏன் ஏற்பட்டிருக்கிறது;
- கடனாக உள்ள தொகை;
- தொகை எப்போது திருப்பிச் செலுத்தப்படவேண்டும்; மற்றும்
- இதை நீங்கள் எப்படித் திருப்பிச் செலுத்தலாம்.

உரிய திகதிக்குள் கடன் திருப்பிச் செலுத்தப்படாவிட்டால், இந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்த உங்களுக்கு உதவுவதற்காக, இரு வாரங்களுக்கு ஒரு முறை உங்களுக்கு Human Services -இடமிருந்து வழமையாகக் கொடுக்கப்படும் SRSS தொகையிலிருந்து 5 சதவீதம் குறைக்கப்படும். இன்னொரு வகையாக, நீதிமன்ற உத்தரவு ஒன்றின் மூலமாகக் கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்துமாறு ‘திணைக்களம்’ உங்களைக் கேட்கலாம். கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படும் வரை, ‘திணைக்கள’த்திடமிருந்து முன்தொகைக் கொடுப்பனவுகளை உங்களால் பெற இயலாமல் போகக்கூடும் (கீழே பாருங்கள்). கடனாயுள்ள தொகைகளைப் பற்றி உங்களுக்குக் கேள்விகள் ஏதுமிருந்தால், அல்லது கழிக்கப்படும் தொகையைப் பற்றி நீங்கள் விவாதிக்க வேண்டும் என்றால், உங்களுடைய SRSS சேவை வழங்குனருடன் பேசுங்கள் அல்லது Human Services -ஐ 131 202 -இல் அழையுங்கள்.

## முற்பணக் கொடுப்பனவு என்றால் என?

சாதாரணமாகக் கொடுப்பனவு ஒன்று உங்களுக்கு எப்போது தரப்படவேண்டுமோ அதற்கு முன்பாக உங்களுக்குக் கொடுக்கப்படும் தொகை ‘முற்பணக் கொடுப்பனவு’ எனப்படும். மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில், உங்களுடைய SRSS சேவை வழங்குனர் முற்பணக் கொடுப்பனவு ஒன்றை உங்களுக்கு அளிக்கலாம். முற்பணக் கொடுப்பனவுக்கான உதாரணங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

- துவக்க நிலைக் கொடுப்பனவுகள்;
- வாடகை முன்தொகைக் கடன்கள்; மற்றும்
- வாடகைப் பிணைத்தொகைக் கடன்கள்.

பின்வரும் நிலைகளில் முற்பணக் கொடுப்பனவு ஒன்றைப் பெறும் தகுதி உங்களுக்கு இல்லாமல் போகலாம்:

- முற்பணக் கொடுப்பனவு ஒன்றை நீங்கள் திருப்பிச் செலுத்திக்கொண்டிருந்தால்; அல்லது
- அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு நீங்கள் திருப்பிச் செலுத்தவேண்டிய கடன் பாக்கிகள் எதுவும் இருந்தால் (இதில் Human Services மற்றும் ‘திணைக்களம்’ ஆகியன உள்ளடங்கும்).

© COMMONWEALTH OF AUSTRALIA, 2018

Australian Government
Department of Home Affairs

# Status Resolution Support Services Programme **Repayment Agreement**

# ‘தகுநிலை தீர்மானிப்பு ஆதரவு சேவைகள் திட்டம்’ **‘கடன் திரும்பச் செலுத்தல் ஒப்பந்தம்’**

Form **1448 TAM** TAMIL

### கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தம்

Status Resolution Support Services (தகுநிலை தீர்மானிப்பு ஆதரவுதவி சேவைகள் (SRSS)) திட்டதின் கீழ் Department of Home Affairs (உள்நாட்டு விவகாரத் திணைக்களம்) (‘திணைக்களம்’) -இன் சார்பாக அவுஸ்திரேலியப் பொதுநல அரசானது நிதியுதவியையும் பவவகைப்பட்ட ஆதரவுதவி சேவைகளையும் உங்களுக்கு வழங்குகிறது.

அப்படிப்பட்ட ஒத்தாசையும் சேவைகளும் இந்த ‘ஒப்பந்த’த்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் அளிக்கப்பட முடியும்.

இந்த ‘ஒப்பந்த’த்தில் கையொப்பம் இடுவதன் மூலம், சட்டரீதியாக அமல்படுத்தப்படக்கூடிய ஏற்பாடு ஒன்றைத் ‘திணைக்கள’த்துடன் நீங்கள் ஏற்படுத்திக்கொள்வீர்கள்.

**சரத்து 1**

**பின்வருவனவற்றை நான் விளங்கிக்கொள்கிறேன்:**

(அ) மிகைக்கொடுப்பனவு அல்லது முன்தொகைக் கொடுப்பனவு ஒன்றை நான் பெற்றால், திருப்பிச் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்துவதற்காக என்னுடைய எதிர்கால SRSS கொடுப்பனவுகளில் இருந்து அதிகமாய்த் தரப்பட்ட கொடுப்பனவுத் தொகை அல்லது முன்தொகைக் கொடுப்பனவு ஆகியன கழித்துக்கொள்ளப்படும்.

(ஆ) SRSS திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட வீட்டில் இருக்கும்போது ஒருவருடைய உடைமைக்கு நான் சேதம் ஏற்படுத்தினால், கொடுக்கப்படவேண்டிய பாக்கித் தொகையும், இத்தோடு சம்பந்தப்பட்ட எவ்வொரு செலவுகளும் என்னுடைய எதிர்கால SRSS கொடுப்பனவுகளில் இருந்து கழித்துக்கொள்ளப்படும்.

(இ) என்னுடைய தவறின் காரணமாக இருந்தாலும் இல்லை என்றாலும், Human Services அல்லது ‘திணைக்கள’த்தின் தவறின் காரணமாக இருந்தாலும், எக்காரணத்தை முன்னிட்டாவது மிகைக்கொடுப்பனவு ஒன்றை நான் பெற்றால், நீதிமன்ற உத்தரவு ஒன்றின் கீழ் அந்த மிகைக் கொடுப்பனவு என்னிடமிருந்து வசூலிக்கப்படக்கூடும்.

**சரத்து 2**

**பின்வருவனவற்றை நான் விளங்கிக்கொள்கிறேன்:**

(அ) கடன் தொகை எவ்வளவு மற்றும் அதைத் திருப்பிச் செலுத்துவதற்கான திகதி ஆகியன Human Services அல்லது ‘திணைக்கள’த்தினால் எனக்கு அறிவிக்கப்படும்.

(ஆ) உரிய திகதிக்குள் முழுத் தொகையினை என்னால் திருப்பிச் செலுத்த இயலவில்லை என்றால், நான் பெறுவதற்குத் தகுதி பெறக்கூடிய எனது எதிர்கால SRSS கொடுப்பனவுகள் எதிலும் இருந்து தொகையைக் கழித்துக்கொள்வதற்கான உடன்பாடு ஒன்றை Human Services-உடன் ஏற்படுத்திகொள்வதற்காக Human Services உடன் அல்லது ‘திணைக்கள’த்துடன் நான் கட்டாயம் தொடர்புகொண்டாக வேண்டும்.

(இ) பணக்கழிப்பின் மூலம் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான உடன்பாடு ஒன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டால், கழிக்கப்படும் தொகை மற்றும் அந்தப் பணக்கழிப்புகள் எப்போது துவங்கும் என்பதும் எனக்கு அறிவிக்கப்படும்.

**சரத்து 3**

**Human Services -இற்கும் ‘திணைக்களத்திற்கும்’ நான் அளிக்கும் அதிகாரம்:**

(அ) Human Services அல்லது ‘திணைக்கள’த்துடன் நான் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால், கடனாக உள்ள மிகைக் கொடுப்பனவு, முன்தொகைக் கொடுப்பனவு அல்லது மற்ற தொகைகளை என்னுடைய எதிர்கால SRSS கொடுப்பனவுகளில் இருந்து 5 சத வீதத்திற்கு மேற்படாத தொகையாகக் கழித்துக்கொள்ள Human Services -இற்கும் ‘திணைக்கள’த்திற்கும் நான் அதிகாரம் அளிக்கிறேன்.

(ஆ) SRSS திட்டத்தின் கீழ் கடனாக உள்ள எவ்வொரு தொகையையும் நான் திருப்பிச் செலுத்துவதற்காக என்னுடைய எதிர்கால SRSS கொடுப்பனவுகளில் இருந்து 5 சத வீதத்திற்கு மேற்படாத தொகையைக் கழித்துக்கொள்ள Human Services -இற்கும் ‘திணைக்கள’த்திற்கும் நான் அதிகாரம் அளிக்கிறேன்.

(இ) சரத்து (3)- இல் சொல்லப்பட்டுள்ள வீதத்திலும், முறையிலும் எனக்குள்ள கடனைப் பணக்கழிப்பின் மூலம் என்னால் திருப்பிச் செலுத்த இயலவில்லை என்றால், என்னுடைய SRSS சேவை வழங்குனர் அல்லது Human Services -உடன் நான் தொடர்புகொள்ளவேண்டும் என்பதை நான் அறிவேன். பின்வருபவர்களுக்கு வெளிப்படுத்த:

**சரத்து 4**

**அதிகாரமளிப்பு மற்றும் தனிநபர் ஒருவரைப் பற்றிய தகவல் வெளிப்பாடு**

**பின்வருவனவற்றிற்கு நான் அதிகாரமளித்து சம்மதிக்கிறேன்:**

(அ) எனக்குக் கடனாக உள்ள தொகைகளை நான் திருப்பிச் செலுத்துவது, அல்லது இந்த உடன்பாட்டின் கீழ் கடன் தொகையை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தமாகத் தேவைப்படும் அனைத்து விசாரணைகளையும் Human Services -அல்லது‘திணைக்களம்’ மேற்கொள்ள.

(ஆ) SRSS திட்டத்தின் நோக்கங்களுக்காக என்னிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்களை Human Services மற்றும் ‘திணைக்களம்’ பயன்படுத்த அல்லது பின்வருபவர்களுக்கு வெளிப்படுத்த:

i. பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு
ii. மாநில மற்றும் பொதுநல அரச முகமைகளுக்கு
iii. எனது SRSS சேவை வழங்குநருக்கு
iv. நீதிமன்றங்களை உள்ளடக்கிய சட்ட அமலாக முகமைகளுக்கு

Please print this form and complete it in English using a pen and BLOCK LETTERS.
Tick where applicable ✓

தயவு செய்து இந்தப் படிவத்தினை அச்சிட்டு, பேனாவைப் பயன்படுத்தி பெரிய எழுத்துக்களில் நிரப்புங்கள்

பொருந்தும் இடங்களில் புள்ளடி இடுங்கள் ✓

## Undertaking
## ஏற்புரை

### Individual’s details – *to be completed by the individual*
### நபரைப் பற்றிய விபரங்கள் - நபரால் பூர்த்தி செய்யப்படவேண்டியது

**1** Individual’s full name (BLOCK LETTERS)
நபரது முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்)

Family name
குடும்பப் பெயர் [ ]

Given names
இட்ட பெயர்கள் [ ]

Date of birth
பிறந்த திகதி [Day நாள் / Month மாதம் / Year வருடம்]

Person’s ID
நபரது அடையாளம் [ ]

ImmiCard number *(if applicable)*
ImmiCard இலக்கம் *(பொருந்தும் என்றால்)* [ ]

© COMMONWEALTH OF AUSTRALIA, 2018

**2** Acknowledgement

I understand that:

- this Agreement is an arrangement between the Commonwealth of Australia and me.
- the law applying to this Agreement is the law of the Australian Capital Territory (ACT).
- this Agreement can be enforced against me in a court with jurisdiction under the law of the ACT.
- by signing this Agreement, I accept the terms of the above from the Commonwealth of Australia as a legally enforceable arrangement.

ஏற்புரை

பின்வருவனவற்றை நான் விளங்கிக்கொள்கிறேன்:

- இந்த 'ஒப்பந்தம்' அவுஸ்திரேலியப் பொதுநல அரசிற்கும் எனக்கும் இடையேயான ஒரு ஏற்பாடாகும்.
- 'அவுஸ்திரேலியத் தலைநகர எல்லைப்பகுதி' (ACT)- யினது சட்டம் இந்த 'ஒப்பந்த'த்திற்குப் பொருந்தும் சட்டமாகும்.
- (ACT)- யினது சட்டத்தின் கீழான அதிகார எல்லைக்குள் வரும் நீதிமன்றம் ஒன்றினால் இந்த 'ஒப்பந்தம்' எனக்கு எதிராக அமல்படுத்தப்படலாம்.
- இந்த 'ஒப்பந்த'த்தில் கையெழுத்திடுவதன் மூலம், மேலே சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளை அவுஸ்திரேலியப் பொதுநல அரசிடமிருந்து சட்டப்படி அமல்படுத்தப்படக்கூடிய ஒரு ஏற்பாடாக நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**Signature of individual**
**நபரது கை யொப்பம்**

Date / திகதி — Day நாள் / Month மாதம் / Year வருடம்

**3** Was an interpreter used?
மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் பயன்படுத்தப்பட்டாரா?

No / இல்லை ☐ ▶ You do not need to complete any more questions. Return this completed Agreement to your case worker.

மேலதிகக் கேள்விகள் எதையும் நீங்கள் பூர்த்தி செய்யவேண்டியதில்லை.

பூர்த்தி செய்யப்பட்ட இந்த 'ஒப்பந்த'த்தினை உங்களுடைய 'கேஸ் வொர்க்க'ரிடம் கொடுங்கள்.

Yes / ஆம் ☐ ▶ **If an interpreter was used in the preparation of this Agreement**, the interpreter must complete their details on page 4.

The interpreter's details must be confirmed by the individual.

**இந்த 'ஒப்பந்த'த்தின் ஆயத்தத்தில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் பயன்படுத்தப்படிருந்தால்,** பக்கம் - 4-இல் தம்மைப் பற்றிய விபரங்களை மொழிபெயர்த்துரைப்பாளர் பூர்த்தி செய்யவேண்டும்.

மொழிபெயர்த்துரைப்பாளரைப் பற்றிய விபரங்களை நபர் அவசியம் உறுதிப்படுத்தவேண்டும்.

## Interpreter's details – *to be completed by the interpreter*
**மொழிபெயர்த்துரைப்பாளரைப் பற்றிய விபரங்கள் -**
***மொழிபெயர்த்துரைப்பாளரால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது***

**4** Interpreter's full name (BLOCK LETTERS)

Family name

Given names

Address (a work address is sufficient)

Postcode

TIS number

Language

**5** Certification

- I have accurately interpreted the contents of this Agreement to the person and checked their understanding prior to them signing.
- I am aware of the confidentiality clause under which I have been engaged and agree to not disclose any information contained in this Agreement.
- I understand the English language and the language used for interpretation and I have truly interpreted the contents of this Agreement.

**Signature of Interpreter**

Date — Day / Month / Year

## Confirmation of interpreter's details – *to be completed by the individual*
**மொழிபெயர்த்துரைப்பாளரைப் பற்றிய விபரங்களை உருதிப்படுத்துதல் — *நபரால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது***

**6** I, (individual's full name – BLOCK LETTERS)
(நபரது முழுப்பெயர் - பெரிய எழுத்துக்களில்) ஆகிய நான்

through the interpretation of (interpreter's full name – BLOCK LETTERS)
(மொழிபெயர்த்துரைப்பாளரது முழுப் பெயர் - பெரிய எழுத்துக்களில்) என்பவரது மொழிபெயர்த்துரைப்பின் மூலமாக

confirm that the interpreter has first declared that he/she has truly interpreted the contents of this Agreement.
இந்த 'ஒப்பந்த'த்தில் அடங்கியுள்ள விடயங்களை உண்மையாக மொழிபெயர்த்துச் சொல்லியுள்ளதாக முதலில் மொழிபெயர்த்துரைப்பாளர் அறிவித்தார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

**Signature of individual**
**நபரது கையொப்பம்**

Date / திகதி — Day நாள் / Month மாதம் / Year வருடம்


© COMMONWEALTH OF AUSTRALIA, 2018